P.R.NO.96 Date: 11-2-2020

## பத்திரிக்கை செய்தி

**பிரதம மந்திரியின் விவசாயி கௌரவ நிதித்திட்ட பயனாளிகளுக்கு உழவர் கடன் அட்டை (KCC) வழங்குவதற்கான திட்ட விழிப்புணர்வு**

தஞ்சாவூர் மாவட்ட விவசாயிகளின் கவனத்திற்கு,

- பிரதம மந்திரி விவசாயி கௌரவ நிதித்திட்டத்தில் (PM KISAN திட்டம்) பயன் பெற்ற விவசாயிகள் மற்றும் தகுதியுள்ளஅனைத்து விவசாயிகளும் உழவர் கடன் அட்டை (Kisan Credit Card) பெற்று பயன் பெறுமாறு தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித்தலைவர் **திரு. ம. கோவிந்தராவ் இ.ஆ.ப.,** அவர்கள் கேட்டுக் கொள்கிறார்.
- பிரதம மந்திரியின் விவசாயி கௌரவ நிதித் திட்ட பயனாளிகளுக்கு உழவர் கடன் அட்டையை வழங்குவதற்காக சிறப்பு பிரச்சாரம் மத்திய அரசாங்கத்தால் 08.02.2020ம் தேதியிலிருந்து துவங்கப்படுகிறது. இந்த பிரச்சாரத்தின் மூலம் பெரும்பான்மையான விவசாயிகளுக்கு 15 நாட்களுக்குள் கடன் அட்டை வழங்கப்படஉள்ளது.
- இந்த கடன் அட்டையை பெற விரும்பும் விவசாயிகள் தங்கள் விவசாய / சேமிப்புத் திட்ட கணக்கு உள்ள வங்கிக் கிளையை அணுகி உழவர் கடன் அட்டையை பெற்று மானிய சலுகையுடன் வங்கிக் கடன் பெறலாம்.
- உழவர் கடன் அட்டையை ஏற்கனவே பெற்றுள்ள விவசாயப் பயனாளிகள் தங்களின் வங்கிக் கிளையை அணுகி கடன் தொகையின் வரம்பை உயர்த்த விண்ணப்பிக்கலாம்.
- செயல்படாத உழவர் கடன் அட்டை உள்ளோர், வங்கிக் கிளையை அணுகி கடன் அட்டையை செயல்படுத்தவும், புதிய கடன் வரம்பிற்கு அனுமதியும் பெறலாம்.
- உழவர் கடன் அட்டை இல்லாத விவசாயிகள் தங்களது நில ஆவணங்கள் மற்றும் அடங்கலுடன் புதிய கடன் அட்டை பெறுவதற்கு தங்களது வங்கிக் கிளையை அணுகலாம்.
- உழவர் கடன் அட்டைதாரர்கள் கால்நடை மற்றும் மீன்பிடிப்பிற்கான பராமரிப்பு செலவுகளுக்கான கடன் தொகையை வரம்பில் சேர்ப்பதற்காக வங்கிக் கிளையை அணுகலாம்.
- PM KISAN திட்ட விவசாயிகளுக்கு கடன் அட்டை பெறுவதற்கு இத்திட்டத்தின் இணையதளம் மூலம் குறுஞ்செய்தி அனுப்பப்படும். இத்திட்ட விவசாய பயனாளிகள் ஒரு பக்கபடிவத்தில் தங்களது நிலம் மற்றும் பயிர்விவரங்கள் மற்றும் வேறு எந்த வங்கிக் கிளையிலும் கடன் அட்டைபெறவில்லை என்பதற்கான உறுதிப் பிரமாணம் சமர்ப்பிக்கவேண்டும். இவ்விண்ணப்பத்தை பொதுசேவைமையங்கள் மூலமும் சமர்ப்பிக்கலாம் என தெரிவிக்கப்படுகிறது.

**மாவட்ட ஆட்சித் தலைவர்**
**தஞ்சாவூர்**